**இரண்டாவது பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், எழும்பூர் சென்னை 8**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்- 8763 /2022
பல்வகை
முதன்னை பதிவேடு
அமர்வு

அரசு தரப்பு சாட்சி. 3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வி. சுபாலி அசோக் | வட்டம் | |
| த/பெ | அசோக்மாதாஸ் | சாதி | |
| வயது | 24/2024 | அழைத்தல் | |
| தொழில் | விற்பனை பிரதிநிதி | மதம் | |
| விலாசம் | எண்-14 அவென்யு, ஹாரிங்டன் ரோடு, சேத்துபட்டு, சென்னை-31 | | |

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ஆம் நாளன்று 1969 ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. (குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது)

**அரசு தரப்பில் முதல் விசாரணை-**

நான் தற்போது மேற்கண்ட முகவரில் வசித்து வருகிறேன். நான் தற்போது விற்பனை பிரதிநிதி ஆக உள்ளேன். கடந்த 11.06.2022 அன்று இரவு 10.30 மணியளவில் மேத்தா மருத்துவமனை அருகே எனது காரில் நானும், அசா.1 எனது நண்பர் தருண்பிரகாஷ் உடன் அமர்ந்து கொண்டிருந்தேன். நான் ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்திருந்தேன். அசா.1 எனது பக்கத்து சீட்டில் அமர்ந்திருந்தார். எனது வாகனத்தை எனது வீடு அமைந்துள்ள ஹாரிங்கடன் ரோடு பகுதியில் 14 வது அவன்யு மற்றும் 15 அவன்யு, இடைப்பட்ட இடத்தில் நிறுத்தியிருந்தேன். அப்போது ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் எங்களை நெருங்கி வந்தார். அவர் வெள்ளை நிறத்தில் கோடு போட்ட சட்டை அணிந்திருந்தார். மேலும், அவர் தலையில்ஹெல்மெட்டும் முகத்தில் கருப்பு நிற மாஸ்க் அணிந்திருந்தார். அவர் கையில மஞ்சள் நிறத்தில் ஸ்டார்ச் லைட் வைத்திருந்தார். அவர் எனது காரில் ஸ்டார்ச் லைட் அடித்து எதற்காக இங்கு கார் நிறுத்தப்பட்டுள்ளது என்று கேட்டார். நானும், அசா.1 வும், காரில் புகைத்து கொண்டிருந்தோம். அதனை அந்த நபர் கேட்டார். அந்த நபர் எங்களை அங்கு காரை நிறுத்தக்கூடாது என்றும் அந்த இடத்தை விட்டு செல்லுமாறு அறிவுறுத்தினார். அப்போது அசா.1 அவரது வீட்டிற்கு செல்வதற்காக வாடகை கார் அமர்த்திருப்பதாகவும் அது வந்தவுடன் அவர் சென்றுவிடுவதாகவும், சொன்னார். அந்த நபர் அசா.1 ஐ காரை விட்டு இறங்கி விலகி செல்லுமாறு சொன்னார். பின்பு அந்த நபர் எங்களை நோக்கி சத்தம் போட்டார். நாங்கள் 15 வது அவன்யு வழியாக காரை நகர்த்தி வந்தோம். அந்த நபர் 15 வது அவன்யு பக்கத்தில் எங்கள் காரை தடுத்து நிறுத்தி அசா.1 னின் வாடகை கார் சம்மந்தமான விவரங்களை கேட்டார். அவர் நாங்கள் புகைத்து கொண்டிருந்ததை சத்தம் போட்டு திட்டினார். அவர் எங்களை சிறையில் அடைத்துவிடுவதாக மிரட்டினார். நாங்கள் அவரை காவல் துறையை சேர்ந்த நபர் என்று கருதினோம்.

ஆனால் அவர் தன்னை போலீஸ் என்று சொல்லவில்லை. நாங்கள் அவரிடம் மன்னிப்பு கேட்டோம். அந்த நேரத்தில் அசா.1 னின் வாடகை இருசக்கர வாகனம் வந்தது. அசா.1 என்னை அந்த இடத்தில விட்டுவிட்டு வாடகை இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டார். அவர் என்னை எனது வீட்டிற்கு செல்லுமாறு அறிவுறுத்தியும், என்னை பின் தொடர்ந்து வருவதாகவும், சொன்னார். என்னை பின் தொடாந்தும் வந்தார். நான் எனது வீடு உள்ள 14 வது அவன்யுவிற்க- செல்வதற்காக எனது வண்டியை U- turn செய்து வந்த போது அந்த நபர் குறுக்கு வழியில் வந்து என்னை Over take செய்து என்னை மறித்து நிறுத்தினார். அவர் எனது காரை அருகில் இருந்த Transformer பக்கத்தில் நிறுத்த சொல்லி அறிவுறுத்தினார். நான் அந்த காரை அங்கு நிறுத்தினேன். எனது சீட்டு பெல்ட்டினை நான் நீங்கினேன். அந்த நபர் காரின் கண்ணாடியை இறக்குமாறு சொன்னார். நான் கார் கண்ணாடியை இறக்கினேன். மீண்டும் அந்த நபர் என்னை புகைத்தது சம்மந்தமாக சத்தம் போட்டார். அவர் என்னை னகுடித்திருக்கிறாயா என்று கேட்டார். ,அந்த நபரின் கேள்விகளுக்கு நான் என்னை காவல்நிலையததிற்கு அழைத்து செல்லுமாறும் நான் அங்கு வைத்து பதில் சொல்கிறேன் என்று சொன்னேன். உடனடியாக அவர் நீ கஞ்சா உபயோகிக்கிறாயா என்று என்னை கேள்வி எழுப்பினார். நான் அதற்கு மறுத்தேன். அவர் என்னிடம் ரூ.2000/- கேட்டார். உனது வீடு எனக்கு தெரியும் என்றும வீட்டிற்கு வந்து உனது தாயாரிடம் சொல்லிவிடுவேன் என்று சொல்லி அவர் பணம் கேட்டார். அவர் காரில் இருந்து அணைத்து பகுதிகளையும் சோதனை செய்து பார்த்தார். காரில் பணம் எதுவுமில்லை. எனக்கு அந்த இயல்பற்ற சூழ்நிலையை தவிர்ப்பதற்காக வீட்டிற்கு சென்று வீட்டில் இருக்கின்ற பணத்தை கொண்டு வருவதாக சொன்னேன். அவர் எனக்கு ரூ.1000/- ரூபாய் கொடுக்கவில்லை என்றால் கண்டிப்பாக வீட்டிற்கு வந்து சொல்லிவிடுவேன் என்று சொன்னார். நான் எனது வீட்டிற்கு முன்பகா காரை நிறுத்தினேன். எனது காலணிகளை அணிவதற்கு கூட அந்த நபர் அனுமதிக்காமல் என்னை வீட்டிற்கு சென்று பணம் எடுத்துவர வற்புறுத்தினார். நான் வீட்டில் இருந்து ரூ.1000/- பெற்று வந்து அந்த நபரிடம் கொடுத்தேன். அது வரையும் அந்த நபர் தலையில் இருந்து ஹெல்மெட்டையும் முகத்தில் இருந்து முக கவசத்தையும் நீக்கவில்லை. என்னிடம் பணத்தை பெற்று கொண்டு எனது காரில் ஓட்டுனர் இருக்கைக்கு பக்கத்து இருக்கையில் அமர்ந்து கொண்டார். அமர்ந்து கொண்டு என்னை டிரைவர் சீட்டில் இருந்து விலகுமாறும் அங்கு வந்து அவர் சோதனை செய்வதாகவும் சொன்னார். அவர் காரில் இருந்த சிறு சிறு பொருட்களை பார்த்து வெளியே தூக்கி எறி சொன்னார் அவர் எனத அனுமதியில்லாமல் எனது ஆடையில் இருந்த பாக்கெட்டுகளில் கையை விட்டு துலாவி சோதனை செய்து பார்த்தார். அன்றைய தினம் நான் பேண்ட் அணிந்திருந்தேன். நான் அவரிடம் என்னை தொட வேண்டா என்றும் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து செல்லுமாறும் வற்புறுத்தினேன். என்னை சோதனை செய்ய வேண்டுமென்றால் பெண் போலீசாரை அழைத்து சோதனை செய்யாலம் என்று சொன்னேன். அவர் என் பேண்டின் பின்புற பாக்கெட்டை (சாட்சி அழுகிறார்) சோதனை செய்ய முயன்றார். நான் அதனை தடுத்தேன். அவர் நான் மேலே அணிந்திருந்த மேலாடையை பிடித்து இழுத்தார். நான் இறுதியாக காரை விட்டு வெளியே குத்திக்க முயற்சி செய்தேன். அந்த நபர் தன்னுடைய சோதனை முடிந்துவிட்டது என்று சொல்லி காரை விட்டு இறங்கி நர்ன அமர்ந்திருந்த ஓட்டுனர் இருக்கைக்கு பக்கத்தில் வந்தார். அவர் என் முகத்திற்கு மிக அருகில் கையை வைத்து ஊதுமாறும், தான் மது வாடை சோதனை செய்வதாகவம் சொன்னார். மீண்டும் அவர் சட்டையின் முன்புறத்தை பிடித்து இழுத்து முன்புறத்தில் அசிங்கமான முறையில் சோதனை செய்ய முயற்சி செய்தார். நான் எனது ஆடையை பிடித்து கொண்டேன். மீண்டும், மீண்டும் என்னை காவல்நிலையத்தற்கு அழைத்து செல்லுமாறு வற்புறுத்தினே. அவர் மீண்டும் எனது முன்புற பேண்டின் பாக்கெட் மற்றும் பின்புற பேண்டின் பாக்கெட்களில் ஆகியவற்றில் சோதனை செய்வதாக சொல்லி கையை விட்டார். பின்பு அவர் தனது சோதனை முடித்துவிட்டதாக சொல்லி என்னை அங்கிருந்து செல்வதற்கு அனுமதித்தார். நான் அந்த நபர் மீது சந்தேகம் கொண்டு அவர் செயல்பாட்டின் மீது சந்தேகம் கொண்டு மறுநாள் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம்

காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் **அசா.ஆ.2** ஆகும். போலீசார் அந்த நபரை ஒரு வாரம் கழித்து பிடித்துவிட்டதாக சொன்னார்கள். சம்பவத்தின் போது எதிரி ஹெல்மேட் மற்றும் முக கவசம் அணிந்திருந்ததால் அவரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. போலீசார் இரண்டு, மூன்று நபர்களை அடையாளம் காண்பித்தார்கள். என்னால் அடையாளம் காட்ட முடியவில்லை. தற்போ என்னிடம் காட்டப்படும் வழக்கு கோப்பில் உள்ள எதிரியின புகைப்படத்திலுள்ள நபரை பார்த்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-</u>**

கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் K. வேலவன் சாட்சியிடன் குறுக்கு விசாரணை தேவையில் இல்லைஎன்று கூறினார்.

சாட்சியின் கையொப்பம்

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 01 ஆம் நாளன்று 1969 ஆம் ஆண்டு உறுதிமொழி சட்டம் (மையச்சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.